Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 19-2-1985 செவ்வாய்க்கிழமை (மாசி 8- ஜ. அவ் 28) முழக்கம் 15

## மூதூர் கிளிவெட்டி பகுதிகளில் 50க்கும் மேற்பட்டோர் கைது!

(திருமலை)

மூதூர், கிளிவெட்டி, ஈச்சிலம்பத்தை, பூமரத்தடிச் சோலை, கடற்கரைச்சாலை ஆகிய பகுதிகள் நேற்றும் நேற்றுமுன் தினமும் சுற்றிவளைக்கப்பட்டு சுமார் ஐம்பது இளைஞர்கள் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டனர். அதேவேளை நிலாவெளி தொலைதொடர்பு திணைக்கள அலுவலகத்தினுள் நேற்றுக் காலை நுழைந்த இனம் தெரியாத சில இளைஞர்கள் அங்கிருந்த தொலைபேசிகள், பட்டரிகளைக் கொள்ளையடித்துச் சென்றதாக குச்சவெளி பொலிஸில் புகார் செய்யபபட்டுள்ளது. எவருங்கைதாகவில்லை, பொருட்களும் மீட்கப்படவில்லை.

## வவுனியா ஆஸ்பத்திரியில் பல்கலைக் கழக மாணவன் சடலம்? காயத்துடன் இரு பெண்கள்!

வவுனியாவில் நேற்று நடைபெற்ற இரண்டு சம்பவங்களின் போது இரண்டுபெண் ள் உட்பட மொத்தம் ஐவர் மரணமானதாகத் தெரியவந்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர் எனக் கூறப்படும் ஒருவரின் சடலம் வவுனியா ஆஸ்பத்திரியில் சூட்டுக்காயங்களுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், சடலம் இதுவரை எவராலும் அடையாளம் காணப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

மற்றொரு பல்கலைக்கழக மாணவர் உட்பட இன்னொரு வரும் வேறொரு இடத்தில் மரணமானதாகத் தெரிய வந்துள்ளது. நீலநிற சீருடை அணிந்தவர்களே இவர்கள்மூவரையும் தங்கள் வாகனங்களில் ஏற்றிச் சென்றனராம்.

இதற்கிடையே இறம்பைக்குளம்என்றஇடத்தில்ஒருநடுத்தர வயதுப் பெண்ணும், மற்றொரு இளம் பெண்ணும் வெட்டுக் காயங்களுடன் மரணமடைந்திருக்கக் காணப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

# ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி பேச எம். ஜி. ஆர். புதுடில்லி செல்வார்!

## ஹமீத் தெரிவித்த ஆலோசனையை சத்வால் இன்று பாரத அதிகாரிகளிடம் அறிவிப்பார்

(சென்னை)

இலங்கையின் இனக்கலவரம் குறித்தும் அதனால் ஏற்பட்டுள்ள நிலை பற்றியும் இவ்விவகாரத்தில் தமிழக மக்களும் அரசும் வகிக்கும் பங்கு என்னவென்பது பற்றி விளக்கவும் முதலமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் விரைவில் புதுடில்லி சென்று பிரதமர் ராஜீவ் காந்தியையும், மத்திய அரசு உயர் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசவுள்ளார். எதிர்வரும் சனிக்கிழமை ராஜீவ் காந்தி தமிழகம் வந்து திரும்பிய பின்னரே எம். ஜி ஆர். புதுடில்லி செல்வார்.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர்திரு எஸ் ஜே எஸ் சத்வால நேற்றுபுதுடில்லிசெல்லும் வழியில் முதலமைச்சரை சென்னையில் சந்தித்து இருபது நிமிடங்கள் பேசினர் அதன்பின்னரே எம் ஜி ஆரின் புதுடில்லி விஜயத்தை, தமிழக மின்துறை அமைச்சர் திரு எஸ் இராமச்சந்திரன் அறிவித்தார்.

தூதுவர் சத்வால் நேற்றிரவு புதுடில்லி சென்றடைந்ததாகவும், இன்று இந்தியவெளியுறவு அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஹமீத் தெரிவித்த யோசனைகளைத தெரிவிப்பார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது,

கடல் எல்லைப் பகுதியில் இலங்கை இந்தியக் கடற்படை கூட்டு ரோந்தை மேற்கொள்வது இலங்கை தெரிவித்த முக்கிய யோசனையாகும்.

### சென்னையில் சந்தித்தார்

இலங்கைக்கான இந்திய தூதுவர் திரு. எஸ். ஜே எஸ், சத்வால் நேற்று பிற்பகல் சென்னையில் தங்கியிருக்கும் தமிழ் அரசியல் தலைவர்களைச் சந்தித்து முக்கிய விடயங்கள் பற்றிப் பேசினர்.

### யாழ்ப்பாணம் ரயில் வராது

வடபகுதிக்கான உணவுப் பொருட்களை புகையிரத மூலம்

-4ம் பக்கம் பார்க்க

### அமிர்தலிங்கம் கருத்து:

## படுகொலைகளைத் தடுத்தால் அகதிகள் வருவது குறையும்

(சென்னை)

இலங்கையின் கரையோரப் பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான தமிழ் அகதிகள் பாரதம் வருவதற்குக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் சென்னையில் நேற்றுத் தெரிவித்தார்,

தமிழர்களுக்கு எதிராக நடைபெறும் இனக்கொலைகளை உடன் நிறுத்த ஆக்கபூர்வமான பயனுள்ள நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்றும்திரு. அமிர்தலிங்கம் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கையில் இருந்து பெருமளவு அகதிகள் பாரதம் வரு

—4—ம் பக்கம் பார்க்க

### வடபிரதேச போக்குவரத்துச் சபை

## தலைவர் கனகரத்தினத்தின் இரு கார்களும் கொள்ளை

வட பிரதேச போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு எஸ். கனகரத்தினத்தின் உத்தியோகபூர்வ பாவனைக்கான காரும், அவரது இல்லத்தில் நின்ற அவரது மகனின் தனிப்பட்ட பாவனைக்கான காரும் இனம் தெரியாத இரண்டு இளைஞர் கோஷ்டிகளினால் நேற்றுக் கொள்ளையடித்துச் செல்லப்பட்டன.

நேற்றுப் பிற்பகல் நான்கு மணிக்கும், இரவு எட்டரை மணிக்குமிடையில் இரண்டு வாகனங்களும் அடுத்தடுத்துக் கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது,

நல்லூர் இராஜவீதியிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து இக்கொள்ளைகள் நடத்தப்பட்டன. முதலில் ஒரு கோஷ்டி சென்று உத்தியோகபூர்வ காரைக் கேட்டதாகவும், மாலை

—4ம் பக்கம் பார்க்க

### வாசு கைது

நவசமசமாஜக்கட்சித்தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார நேற்று விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

### கண்டிமாநகரில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பேச்சு:

## இந்தியாவுடன் விரோதித்துக் கொண்டு எமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது!

(கண்டி)

இந்தியா மிகவும் வலிமை பொருந்திய ஒரு நாடு. இந்தியாவுக்குச் சவால் விடுவதாலும், இந்தியாவுடன் பகைத்துக்கொண்டும் இலங்கையினால் எதனையும் சாதித்து விட முடியாது 1977ம் ஆண்டு முதல் இந்தியாவுக்கு விரோதமான நடவடிக்கைகளிலேயே ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டுவருகின்றது. இந்தியாவுடன் நட்புறவின் மூலமே எமது இன்றைய பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியுமென்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற கட்சியின் பொதுக் கூட்டமொன்றில் அவர் உரையாற்றுகை

—4-ம் பக்கம் பார்க்க

### ஜி. சி. ஈ. விசேஷ பரீட்சைக்காக

## 172 நிலைய பாடசாலைகளும் 27 முதல் 8 வரை மூடப்படும்

இம்மாதம் 27ம் திகதி ஆரம்பமாகும் ஜி சி ஈ சாதாரண தர விசேஷ பரீட்சை யாழ்ப்பாண மாவட்டத்தில் 172 நிலையங்களில் நடத்தப்படவுள்ளது மொத்தம் 70 பாடசாலைகளில் 172 நிலையங்களும் அமையும்.

பரீட்சையை இப்பாடசாலைகளில் நடத்துவதற்கு வசதியாக குறிப்பிட்ட பாடசாலைகள், பரீட்சை நடைபெறும் தினங்களான இம்மாதம் 27ம் திகதியிலிருந்து மார்ச் மாதம் 8ம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு எம். சிமியாம்பிள்ளை தெரிவித்தார்.

பரீட்சைக்குத் தேவையான கடதாசி வகைகள், நேர்சூசி, பரீட்சை நிலைய பிரவேச

—4—ம் பக்கம் பார்க்க

### 86 வீடுகளை வெள்ளிக்கு முன் காலியாக்க உத்தரவு!

## நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் குருநகர் குடும்பங்களுக்கு இடவசதி?

குருநகர் இராணுவ முகாமுக்கு அண்மையிலுள்ள 86 வீடுகளில் வசிக்கும் 150 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 850 குடியிருப்பாளர்களையும் பாதுகாப்பு நடவடிக்கை காரணமாக எதிர்வரும் 22ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்

—4—ம் பக்கம் பார்க்க

### இவர்களுக்கு 23ல் பென்ஷன்

யாழ்ப்பாணம் கச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் பென்ஷன் எடுத்தவர்களுக்கு இம்மாதம் 23ம் திகதி குருநகர் இலங்கைவங்கிக்கிளையில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது,

### 300 மீட்டரில் வசிப்பவர்களை

## காரைநகரிலும் வெளியேற கடற்படையின் உத்தரவு!

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து முன்னூறு மீட்டர் தூரத்துக்குள்ளிருக்கும் வீடுகளில் வசிப்பவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு உத்

— 4-ம் பக்கம் பார்க்க

ஈழமுரசு

காங்கேசன்துறையிலுள்ள

# சீமெந்து தொழிற்சாலை மூடப்பட்டால் நூற்றுக்கணக்கானோர் வேலையை இழப்பர்

## பருத்தித்துறை பிரஜைகள் குழு அமைச்சருக்கு கடிதம்

(பருத்தித்துறை)

''காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை தற்காலிகமாக வேனும் மூடப்படுமாயின் அங்கு வேலை பார்க்கும் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் தொழிலிழக்கவும் தமது ஜீவனோபாயத்தை பறிகொடுக்கவும் நேரிடும்'' என்று பருத்தித்துறைப பிரஜைகள் குழுத்தலைவர் பேராசிரியர் திரு வி. கே. கணேசலிங்கம் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. டென்ஸில் பெர்னாண்டோவுக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் அச்சம் தெரிவித்திருக்கிறார்.

''காலி சீமெந்துத் தொழிற்சாலை நூறு கோடி ரூபா செலவில் விசாலிக்கப்ப வுள்ளது என்ற செய்தி சந்தேகத்தை ஏற்படுத்துவதற்கு இடமுண்டு. காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை நிரந்தரமாக மூடப்படுவதற்கு இவ்விசாலிப்பு நடவடிக்கை ஒரு முன்னோடியாக இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது'' என்றும் பேராசிரியர் இம் மகஜரில் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேற்படி மகஜரில் கூறப்பட்டிருடபதாவது. ''தீவிரவாதிகள் தாக்குதல்களின் விளைவாக காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை இயந்திரங்களை ஒரு பூரணத்தொழில் நுட்பப் பரிசோதனைக்கு வகை செய்யுமுகமாக குறைந்த பட்சம் ஓர் ஆறுமாத காலத்துக்காவது தொழிற்சாலையை மூடிவிடும்படி தொழில் நுட்ப நிபுணர்களால் அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது என நாளிதழ் ஒன்றில் வெளிவந்த செய்தி மூலம் அறிய முடிகிறது. இத்தொழிற்சாலையிலுள்ள இயந்திரங்களை மீண்டும் இயங்க வைப்பதற்கு அத்தகைய ஒரு பரிசோதனை அவசியம் எனவும் அச்செய்தியில் காணப்படுகிறது.

இத்தொழில் நுட்ப ஆலோசனை எந்த அளவுகருத்தொழில் நுட்ப வாரியாகச் சரியானது என்பது விவாதத்திற்குரிய விடயமாகும். எவ்வாறாயினும் தொழிற்சாலையை மூடி விடாமலே அதனை இப்படி விரும்பப்படும் ஒரு பரிசோதனைக்கு கட்டம் கட்டமாக உட்படுத்த இயலுமாதலால் இவ்வாறு தொழிற்சாலையை மூடிவிடுவது காரண காரிய ரீதியானதல்ல என்பது யாவரும் அறிந்ததே.

தற்காலிகமாயினும் தொழிற்சாலை மூடப்படுதலால் அங்கு வேலைபார்க்கும் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் தொழிலிழக்கவும் தமது ஜீவனோபாயத்தைப் பறிகொடுக்கவும் நேரிடுவது மட்டுமல்ல அவர்களில் தங்கியிருக்கும் ஆயிரக்கணக்கானவர்கள் முழுப் பட்டினியால் வாடவும் நேரிடும். கணவர் மனைவியர் சிலரும் அங்கு தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளனா. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இவ்விருவருடைய உழைப்பு திடீரெனப் பறிக்கப்பட்டால் அவர்களதும் குடும்பத்தினதும் கதி என்னகும்என ஊகித்து உணர்ந்து கொள்ளலாம். மேற்படிப் பத்திரிகைச் செய்தி காலி தொழிற்சாலை நூறு கோடி ரூபா செலவில் விசாலிக்கப்படவுள்ளது எனவும் கூறுகிறது. இதன் மூலம் ஓர் ஐயம் எழ இடமுண்டு. காங்கேசன்துறை தொழிற்சாலை நிரந்தரமாக மூடிவிடப்படுவதற்கு இவ்விசாலிப்பு நடவடிக்கை ஒரு முன்னோடியாக இருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.


சீமெந்து உற்பத்திக்கு மூலப்பொருளாகப் பயன்படுவது 'கிளிங்கர்' எனும் ஒருவகைக் கரியாகும். வெளிநாட்டிலிருந்து அதனை இறக்குமதியாக்கி அதனைக் கொண்டு காலியிலுள்ள தொழிற்சாலை இயக்கப்படவுள்ளது எனவும் அச்செய்தி மேலும் குறிப்பிடுகின்றது. இச்சந்தேகம் இதன்மூலம் வலுவுறுகிறது.

வாழைச்சேனையில் உள்ள காகித ஆலையின் உற்பத்தித் தொழிற்பாடுகள் வெறும்பெயரளவில் மாத்தரம் தற்போது சில காலமாக நடைபெற்று வரும்வேளை அதனின்றும் பிரிந்து இயங்கத் தலைப்பட்டபெலியதத ஆலை நவீனமயமாகி மலர்ந்து வருகின்றமை பகிரங்க இரகசியமாகும். இவ்விதமே பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மூடி விடவும் பெலியத்தைக்கே அதனை இடம் பெயர்த்துச் செல்லவுமநடவடிக்கைகள இடம் பெற்று வருகின்றமையை சில பாராளுமன்ற விவாதங்கள் ஊர்ஜிதம் செய்வதாகக் கொள்ளலாம்.

இச் செயல்களானவை இப்பிராந்தியத்துப் பொருளாதாரச் சப நிலையை பாரதூரமாகப் பாதிப்பதுடன் நின்றுவிடாது ஆயிரக் கணக்கான பொதுமக்களைப் பட்டினி போட்டு வருத்தவும் ஏதுவாகும். தற்போதைய நெருக்கடி நிலையில் இது சற்றேனும விரும்பத்தக்கதல்ல

எனவே இத்தொழிற்சாலையை மூடும் உத்தேசத்தை தாங்கள் தயவு செய்து மீளாய்வு செய்ய வேண்டும்'' இவ்வாறு இம் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



### செல்வன் வி. அருளானந்தம்

மலர்வு : 18-11-1965 உதிர்வு : 21-1-1985

''ஆலமரமாய் அனைவருக்கும் நிழலாய் அவனியில் பவனி வந்து உயிர் மீட்க உயிர் ஈந்து அமலனடி சேர்ந்த அன்பின் திருவுருவே! எங்கள் நெஞ்சிருக்கும் வரை உன் நினைவிருக்கும்''

பருத்தித்துறை மக்கள் சந்தை இல42 நந்தனு வாழைப் பழக்கடை உரிமையாளர்களில் ஒருவரும், காலஞ்சென்ற விஞசித்தம்பி (செல்லத்துரை)யின் நான்காவது புத்திரனுமான அமரர். வி அருளானந்தத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்கட்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்கட்கும், உதவிகள் புரிந்து துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும், ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை 20-2-85 புதன்கிழமை நடைபெறும் அன்னாரது அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினர்
நாகலிங்க முதலியார் தெரு, பருத்தித்துறை.




✻ கொழும்புத்துறை, இராசகோபால் ஜெயசாந்தகுமாரி தம்பதிகளின் மகள் சுபகலா இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ கொக்குவில் கிழக்கு, சச்சிதானந்தம் வசந்தகுமாரி தம்பதிகளின் மகன் சகிசன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ தொல்புரம் கிழக்கு, இராமலிங்கபிள்ளை தம்பதிகளின் மகள் அபிராமி இன்று தனது நாலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ கோண்டாவில் கிழக்கு, தர்மகுலசிங்கம் சிவமணி தம்பதிகளின் மகள் வனஜா இன்று தனது நாலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ யாழ். முஸ்லிம் கல்லூரி வீதி, முஹமது உசனர் செய்னம்பு நாச்சியா தம்பதிகளின் மகள் ஜலீலா இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ பாஷையூர் சென் ஜேம்ஸ், பிரான்சிஸ்கா தம்பதிகளின் மகள் தர்ஷினி ஆன் இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ யாழ். பலாலிரோட். சிவப்பிரகாசம் கெங்காதேவி தம்பதிகளின் மகன் சிற்சபேசன் இன்று தனது பன்னிரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ ஏழாலை மேற்கு, நாய்க்கண்ணி, சிவபாதசுந்தரம் தவமணி தம்பதிகளின் மகள் பவானி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ திருநெல்வேலி செங்குந்தா லேன், முத்துசாமி சிவபாக்கியம் தம்பதிகளின் மகன் பிரசாந்தன் இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ நீர்வேலி வடக்கு, சந்திரன் வசந்தி தம்பதிகளின் புதல்வன் சரத்பாபு இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

## மாணவருக்கான பண்ணிசை நாவன்மைப் போட்டிகள்

(புங்குடுதீவு)

மாணவர்களிடையே நாவன்மை, பண்ணிசைப் போட்டிகளை நடத்திப் பரிசில்கள் வழங்குவதற்கு கீரிமலை சிவநெறிக் கழகம் முன்வந்துள்ளது. பாலர் பிரிவு, ஆரம்ப பிரிவு, கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவு, அதி மேற் பிரிவு என ஆறு பிரிவுகளாக ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறாக இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் பங்கு கொள்ள விரும்பும் பாடசாலை மாணவர்கள் அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாகத் திரு, ச, விநாயகரத்தினம், சிவநெறிக் கழகச் செயலர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரில் 14ஆம் திகதி கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் நிகழும் சித்திரைப் புத்தாண்டு விழாவில் போட்டிகளில் முதலிடம் பெறுவோருக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

தெரிவு நிலைப் போட்டிகள் அடுத்த மாதம் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி. பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம், யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயம் ஆகியவற்றில் நிகழவுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் இரு பாலாரிலும் தனித்தனி முதல் ஐவருக்குப் பெறுமதி வாய்ந்த புத்தகப் பரிசில்களும், அடுத்த மூவருக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## புதன்கிழமை மா கப்பல் வரும்

யாழ்ப்பாணத்துக்கு மேலும் 950 தொன் மாவு இவ்வாரம் வரவுள்ளது.

திருமலைத் துறைமுகத்தில் கப்பலில் மாவு ஏற்றப்படுவதாகவும் புதன்கிழமை கப்பல் காங்கேசன்துறை வந்து சேரலாமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## முல்லை அகதிகளுக்கு ஏழாலை ஆசிரியர் மாணவரும் உதவி

(ஏழாலை)

முல்லைத்தீவு அகதிகள் முகாம்களில் உள்ளவர்களுக்கு உதவும் பொருட்டு மாணவர் ஒன்றியம் நிதி, உடுபுடவைகள் சேகரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது,

ஏழாலை சைவ மகாஜனவித்தியாலயத்தைச் சேர்ந்த அனைத்து மாணவர்களும், ஆசிரியர்களும் இவர்களுக்குத் தாராளமாக உதவியுள்ளனர். சுமார் மூவாயிரத்து ஐநூறு ரூபா பெறுமதியான உடுபுடவைகளும். நிதியும் இவ் வித்தியாலய மாணவர்களும், ஆசிரியர்களும் சேகரித்துதவினர், இம் முயற்சியை மாணவர் ஒன்றியப் பிரமுகர்கள் மனந்திறந்து பாராட்டியுள்ளனர்.

## வல்லைப்பால இரு வீதியும் திருத்தம் செய்யப்பட்டன

(சுண்டுக்குளி)

வல்லையிலுள்ள இரு பாலங்கள் பயங்கர குண்டு வெடிப்புக்கள் மூலம் தகர்க்கப்பட்டதால் பாதிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம்- பருத்தித்துறை நேரடிப் பஸ் போக்குவரத்துச் சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. தகர்க்கப்பட்ட இரு பாலங்களுக்கும் அருகால் வீதியோடுகடலைமேவிமண்போட்டு நிரவப்பட்ட பாதையொன்றின் மூலம் தற்போது இப் போக்குவரத்துச் சேவை வழக்கம் போல் ஆரம்பமாகியுள்ளது.

இரு பாலங்களும் தகர்க்கப்பட்டதைத்தொடர்ந்து கடந்த பல தினங்களாக யாழ்ப்பாணம்- வல்லை, வல்லை- பருத்தித்துறை இணைப்பு பஸ்சேவை, மினிவான் போக்குவரத்துச் சேவைகள் நடாத்தப்பட்டு வந்தன. இதனல் பொதுமக்கள் மிகவும் சிரமம் அடைந்து வந்ததுடன் இரு உடைந்த பாலங்களையும் இடிபாடுகளுக்கிடையில் பல அடி ஆழம் இறங்கியே வீதியில் ஏறி கடக்க வேண்டிய பயங்கர அனுபவத்திற்கு ஆளாகி வந்தனர்.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய வீடியோ டெக் NV 300 EN NV 370 ஆகிய இரண்டும் விற்பனைக்குண்டு.
ருதா, 21, வேம்படி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிகு தொடர்பு கொள்ளவும்.

யாருக்கும் சொல்ல முடியாத சொலியும் பலன்கிடைக்காத மனக்கஷ்டங்களா? சகலவித இஷ்ட சித்திகளும் பெறவேண்டுமா? ஸ்ரீசக்கர பூசை செய்யுங்கள் கிடைக்குமிடம்; ஏலவ்ற்பனை நிலையம் கோப்பாய்.

### விற்பனைக்கு

Toyota Hiace R. H. 20 உடன விற்பனை குண்டு. சிறிய Volgswagon, Minor போன்ற வாகனங்களுக்கும மாற்றலாம்
74, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.



ஈழமுரசு

19—2—1985



### உதய சிந்தனை

கொல்லப்பட்டாலோ சுவர்க்கத்தை அடைவாய். ஜெயித்தாலோ பூமியை அனுபவிப்பாய்! ஆகையால் போருக்குத் துணிந்தவனாக எழுந்திரு!
-பகவத் கீதை

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி : 23336

## இதய ஒலி

19-2-85 செவ்வாய்க்கிழமை (இரத்தாக்ஷி மாசி 8)

# உள்ளக்கிடக்கையை புரிந்து கொள்ளும்!

தீர்வு காணப்படாது இழுபறியில் இருக்கும் இலங்கையின் இனப்பிரச்சினையில் இரண்டு திருப்பங்கள் இப்போது ஏற்பட்டுள்ளதை அரசியல் அவதானிகள் அவதானித்துள்ளனர்.

முதலாவது, அமைச்சர் அத்துலத் முதலிக்கும் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையில் இடம்பெற்ற தனிப்பட்ட சந்திப்பு.

இரண்டாவது, தமிழக மீனவர் இலங்கைக்கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்படுவதும், இலங்கைத் தமிழ் அகதிகள் தினசரி பல நூற்றுக்கணக்கில் தமிழகத்துக்குச் சென்று கொண்டிருப்பதுமாகும்.

ராஜீவ்- லலித் சந்திப்பின் விபரங்கள் மூடுமந்திரமாகவே உள்ளன. உள் ரகசியங்களை வெளியிட இருபகுதியினரும் தயாராக இல்லை.

திருவனந்தபுரத்தில் இறங்கிய ஆயுதம் தாங்கிய விமானத்தை இலங்கை செல்ல ராஜீவ் வழங்கிய அனுமதி, இலங்கைத் தலைவர்கள் மத்தியில் ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தமிழகத்தில் முன்னர் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஏழு இலங்கைக் கடற்படையினருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்காது அவர்களை விடுதலை செய்தமையும் கூட பாரதத்தின்பால் இலங்கைக்கு இருந்து வந்த சந்தேகத்தைக் குறைத்திருக்கலாம்.

இதன் பின்னரே ஜனாதிபதி தமது தூதுவராக லலித் அத்துலத் முதலியை புதுடில்லிக்கு அனுப்பி வைத்தார்.

விட்டுக்கொடுத்து காரியத்தைச் சாதிப்பதும் அரசியலாளர்களின் ' சாம, பேத, தான, தண்ட'' நடைமுறைகளில் ஒன்றாக இருக்கலாம்.

இந்தவகையில் ராஜீவ் காந்தி வெற்றிபெறுவாராஞல் அது தமிழர்கள் செய்த பாக்கியமாகவே கருதப்படும்.

அதே நேரத்தில் தமிழகத்தில் நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்து வரும் நெருக்கடி நிலைமையும் மத்திய அரசுக்குப் பெரும் தலையிடியைக் கொடுக்குமென்பதை மறந்துவிடமுடியாது.

தமிழக மீனவர்கள் இந்திய கடற்பிராந்தியத்துக்குள் வைத்து இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதும், சுட்டுக் கொல்லப்படுவதும், ஈழத் தமிழ் அகதிகள் அங்கு செல்லும் பிரச்சினையிலும் பார்க்க மோசமானதாகும்.

தமிழ்த் தீவிரவாத இளைஞர்களே கடற்படைச் சீருடையில் சென்று இந்திய மீனவர்களைச் சுட்டிருக்கலாமென்றும், இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே குரோதத்தை உண்டு பண்ண அவர்கள் மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கையாக இது அமையலாம என்றும் வெளிநாட்டமைச்சர் ஹமீத் விளக்கியுள்ளார்.

இது உண்மையானல் கடல் கண்காணிப்பு வலயமும், கடற்படையினரின் 24 மணி நேர ரோந்தும் என்னுயிற்று என்றே கேட்கத் தோன்றுகின்றது.

தமிழ் இளைஞர்களை தமிழ்நாட்டு அரசாங்கத்துடன் கொழுவி விட்டு விளையாட்டுப் பார்க்க முனைவதற்கான ஒரு முயற்சியாகவே இந்த விளக்கம் தெரிகின்றது.

கடற்பிரதேசத்தில் தமிழ் இளைஞர்கள் கடற்படைச் சீருடையில் நடமாடுகிருர்கள் என்ருல், இலங்கையின் கடற்படையினர் அங்கு என்ன செய்கிருர்கள்?

தமிழக மீனவர்களைத் தாக்கி, அவர்களது உடைமைகளைப் பறித்தெடுத்தபோது கையும் மெய்யுமாக கைதான ஏழு கடற்படை வீரர்களும் கூட ' கடற்படைச் சீருடை'' அணிந்த தமிழ் தீவிரவாதிகள் தானு?

இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளால் தமிழகம் கொதித்து எழுந்து கொண்டிருப்பதை அங்கிருந்து வெளியாகும் அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

காரசாரமான தீர்மானமொன்றை தி. மு. க. நிறைவேற்றியுள்ளது கொடுமைகள் அதிகரிப்பதற்கு மத்திய அரசின்போக்கே காரணமென்று குற்றம்சாட்டியுள்ள தி.மு.க., இலங்கை ராணுவத்தால் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படப் போகிறது என்றும் எச்சரித்துள்ளது.

இந்தியாவின் நியாயமான உணர்வுகளையும், நிதானப்போக்கையும் மட்டமாக எண்ணி, முறை தவறி, தவருன பாதையில் இலங்கை நடந்து கொள்கிறது என்று தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். கண்டனம் தெரிவித்துள்ளார்.

படையெடுப்புத் தீர்மானமொன்றை காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் நிறைவேற்றியுள்ளது.

இவையெல்லாம் தமிழகத்தின் உள்ளக்கிடக்கையை வெளிக்காட்டுகின்றன மாநிலத்தின் மனப்போக்கை மத்திய அரசு புரிந்து கொள்ளும் என்பதே அனைவரதும் நம்பிக்கை.

சுமுக நிலையில் மீண்டும் நெருக்கடி மேகமா?

# இஸ்ரேலிய துருப்புகள் மீது லெபனன் படை தாக்குதல்

(பெய்ரூட்)

தென் லெபனனில் இருந்து இஸ்ரேலியத் துருப்புகள் வாபஸ் பெறுவதற்கான இரண்டாம் கட்டம் குறித்து அடுத்த வாரம் முடிவு செய்யப்படும் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. இஸ்ரேல் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் இச்செயற்பாடுகள் இன்னமும் மூன்று வாரங்களுக்குள் துவங்கும் எனவும் கூறப்பட்டது. இதேவேளை தென்லெபனன் கிளர்ச்சிப்படைகள் இஸ்ரேலியத் துருப்புக்கள் மீது இரு தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலானது இஸ்ரேலியத் துருப்புகள் வாபஸ் பெறுதலில் புதிய நெருக்கடியைத் தோற்றுவித்து விடுமோ என அச்சம் தெரிவிக்கப்படுகிறது. தனது துருப்புகள் மீது தாக்குதல் நடந்தால் திரும்ப வந்து பதிலடி கொடுப்போம் என்று இஸ்ரேலிய அதிகாரிகள் கூறியிருக்கின்றனர்.

தென் லெபனனில் பல இஸ்ரேலிய இராணுவ அமைப்புகள் கலைக்கப்பட்டு வருகின்றன என்றும் இஸ்ரேலிய அமைச்சரவை கூடித் தற்போதைய நிலை குறித்து விரைவில் ஆராயக்கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## குறுகிய விஜயம்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனதிபதி திரு. றெனல்ட் ரீகன் மே மாதத்தில் தனது ஐரோப்பிய விஜயத்தை சுருக்கிக் கொள்ளவுள்ளார்.

## சந்திரசேகர் கோரிக்கை

(புதுடில்லி)

பஞ்சாப் பிரச்சினைக்கு உடனடி தீர்வு காணப்பட வேண்டும் என்று ஜனதாக் கட்சித் தலைவர் திரு சந்திரசேகர் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## "இரக்கமற்ற தாக்குதலுக்கு இரை தவருன செயலுக்கு நியாயம் கற்பிக்கவும் முயற்சி'': அமிர்

(சென்னை)

இலங்கையின் வடக்கு, கிழக்கு வனப்பகுதிகளில் ஐம்பத்திரண்டு தமிழ்ப் போராளிகள் கொல்லப்பட்டதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி வெளியிட்டுள்ள தகவல் சரியானதல்ல என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கம் நேற்று சென்னையில் தெரிவித்துள்ளார்.

' முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சில தமிழ் விவசாயிகளே கொல்லப்பட்டுள்ளனர். இராணுவத்தால் விரட்டப்பட்டு அகதி முகாம்களில் தங்கியிருந்த பின் இவர்கள் பழைய இடங்களுக்குத் திரும்பிக்கொண்டிருக்கையில் இராணுவத்தின் இரக்கமற்ற தாக்குதலுக்கு இரையானுர்கள்'' என்று சொன்ன அவர், "அவர்களைப் போராளிகள் எனக் கூறித் தாக்குதலுக்கு நியாயம் கற்பிக்க முயல்கிருர் லலித்'' என்றும் கூறினுர்.

## உ. பி. தேர்தல்

(லக்னோ)

உத்தரப்பிரதேசத்தில் 422 தொகுதிகளில் 1719 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

எதியோப்பியாவில்

## மக்கள் பட்டினியால் வாட பல தொன்பழ ஏற்றுமதி?

(அடிஸ் அபாவா)

எதியோப்பியாவில் மக்கள் பட்டினியால் வாடிமடிவதாகக் கூறப்படும் வேளையில் எதியோப்பிய அரசு ஐந்து தொன் பழங்கள், காய்கறிகளை பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது என பிரிட்டின்சஞ்சிகை ஒன்றுடன் ஆளும் கன்ஸவேடிவ் கட்சி உறுப்பினர் ஒருவரும் குற்றஞ் சாட்டியுள்ளார்.

அறுபது இலட்சம் மக்கள் பட்டினியால் வாடுவதாகக் கூறப்படும் எதியோப்பியாவுக்கு பல லட்சம் ஸ்டேர்லிங் உதவிகளை பிரிட்டிஷ் வழங்கி வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ராஜீவ் எம். ஜி. ஆரை சந்திப்பார்?

(பாண்டிச்சேரி)

பிரதமர் திரு. ராஜீவ் காந்தி எதிர்வரும் சனிக்கிழமை பாண்டிச்சேரிக்கும், தமிழ் நாட்டிற்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

காரைக்காலுக்கும் விஜயம் செய்யவுள்ள பிரதமர் சென்னை வருகையில் முதலமைச்சர் திரு. எம் ஜி. இராமச்சந்திரனையும் சந்திக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

திரு ராஜீவ் காந்தி பிரதமரானபின் திரு எம். ஜி ஆரை இன்னமும் நேரில் சந்திக்கக் கூடிய வாய்ப்பு உருவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தூய, செயல் திறனுள்ள நிர்வாகம்:

## அரசியலில் அறநெறிகள் புகுத்தப்படும்'' —ராஜீவ்

(லக்னோ)

"தூய்மை மற்றும் செயல் வேகம் உள்ள நிர்வாகத் தோற்றுவிப்புக்காக அரசியலில் பழைய அறநெறிகள் புகுத்தப்படும்'' என்று பிரதமர் திரு. ராஜீவ் காந்தி உத்தரப் பிரதேசத்தில் நடைபெற்ற பல பொதுக் கூட்டங்களில் பேசுகையில் தெரிவித்தார்.

"வலுவான மாநில அரசுகள் இருந்தால் மட்டுமே மத்திய அரசின் செயல் திட்டங்கள் ஆக்கபூர்வ பலன் பெறும், என்று சொன்ன அவர் "மத்தியிலும் மாநிலங்களிலும் ஒரே கட்சி ஆட்சி தான் இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. மாநிலங்களில் செயற்படக் கூடிய கட்சியே தேவை என்று தான் சொன்னேன்'' என்று கூறினுர்.

## தமிழர் பகுதி: கொடுமைகள் நீடிக்கிறதாம்

(சென்னை)

தமிழர்கள் இலங்கையில் அதிகமாக வாழும் யாழ்ப்பாணம், தலைமன்னர், மன்னர் பகுதிகளில் இராணுவத்தால் வீடுகள் சூறையாடப்படுவதாகவும், சித்திரவதைகள், கற்பழிப்புகள் நிகழ்வதாகவும் நிருபர் தகவல் தந்துள்ளதாக இந்திய வானெலியின் சென்னை மாநிலப் பிரிவு நேற்று அறிவித்தது.

தமிழ்ப் போராளிகளைத் தேடுவதாகக் கூறி அப்பாவி மக்கள் மேற்படி பகுதிகளில் கொடுமைப்படுத்தப்படுவதாகவும் இவ்வானெலி மேலும் தெரிவித்தது.

தூத்துக்குடியில்

## ஒரு கோடி ரூபா செலவில் இலங்கை அகதி வீடமைப்பு

(தூத்துக்குடி)

இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்கென தூத்துக்குடியில் ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கான அரசின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. இவ் வீடமைப்புத் திட்டத்திற்கு ஒரு கோடி ரூபா செலவாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒருமாதத்துள் நூற்றுப் பதினெரு வீடுகள் நிறுவவும் முயற்சி நடைபெறுகிறது. தற்போது முந்நூற்றுத் தொண்ணூற்று ஐந்து பேர் உள்ளூர் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஈழமுரசு

## பாதுகாப்புக்கு ஏழு அமைச்சர்கள்; படையினருக்கே பாதுகாப்பில்லை!

இந்த நாட்டில் இப்போது பாதுகாப்பு வேலைகளுக்கென ஏழு அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஆனால் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் படை வீரர்களுக்கே இப்போது பாதுகாப்பில்லை என்று கண்டிக் கூட்டத்தில் பேசும்போது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார். பாதுகாப்புக்கும், தேசிய பந்தோபஸ்துக்குமென ஏழு அமைச்சர்கள் இருந்தும் சாதாரண மக்களுக்கு இந்த நாட்டில் எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது இதுதான் இன்றைய ஆட்சியில் நாட்டு மக்களுக்குக் கிடைக்கும் பாதுகாப்பு எனவும் அவர் தெரிவித்தார்.

### மார்ச் முதல் சம்பள உயர்வு:

# பயிற்சி பெற்ற ஆசிரியர் அனைவருக்கும் 190 ரூபா சம்பள உயர்வு கிடையாது!

ஆசிரியர்களின் சம்பளத்தினை மீளாய்வு செய்து விதப்புரைகள் வழங்குவதற்காக தயாரத்தின தலைமையில் நியமிக்கப்பட்ட சம்பள மீளாய்வுக்குழுவின் அறிக்கையில் அடங்கியுள்ள விதப்புரைகளின் படி 1985 ஜனவரி முதல் சம்பள அதிகரிப்பினை வழங்குவதென்று அமைச்சரவை முடிவெடுத்திருந்தது

1985 ஜனவரி முதல் அமுலுக்குவரத்தக்கதாக மார்ச் மாதத்தில் இச்சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் 190 ரூபா சம்பள உயர்வு கிடைக்கிறது என்றவாறாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த 190 ரூபா அதிகரிப்பினை பயிற்றப்பட்ட ஆசிரியர்களில் மிகக் குறைந்த தொகையினரே பெறுகிறார்கள் ஏனையோர் ரூபா நூற்றெழுபத்தைந்தையே சம்பள அதிகரிப்பாகப் பெறுவார்கள்

பயிற்றப்பட்டவர்களில் 190 ரூபா சம்பள உயர்வு பின்வரும் பிரிவினருக்கு மாத்திரமே கிடைக்கும்.

1. ஆசிரியர் கல்லூரியில் ஈராண்டு உள்ளகப் பயிற்சியையும், ஓராண்டு வெளிக்களப் பயிற்சியையும் முடித்து 1983 ஆம் ஆண்டோ அதற்குப் பின்னரோ கடமையேற்றவர்கள்

2 1985 ஜனவரியில் 1070 ரூபாவை திரட்டியமாதச் சம்பளமாகப் பெற்றவர்கள்.

1985 ஜனவரியில் 1040, 1055, 1085 ரூபா திரட்டிய சம்பளமாகப் பெற்றவர்கள் முறையே 180 185 195 ரூபா சம்பள அதிகரிப்பினைப் பெறுவார்கள்.

எஞ்சிய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் 175 ரூபா மட்டுமே சம்பள அதிகரிப்பாகக் கிடைக்கும்.

சேவையிலுள்ள பயிற்றப்பட்டோரில் 10 வீதமானோர் மாத்திரமே 190 ரூபா சம்பள அதிகரிப்பினைப் பெற ஏனையோர் 175 ரூபா அதிகரிப்பினையே பெறுகிறார்கள்.

இதேவேளையில் தராதரப் பத்திரம் அற்ற ஆசிரியர்களுக்குச் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட மாட்டாது.

தராதரப் பத்திரம் உள்ள ஆசிரியர்களுக்கு (க பொ த. உயர்தரம்) எவ்வளவு சம்பள அதிகரிப்பு வழங்கலாம் என்பதை அரசாங்கம் இன்னும் தீர்மானிக்கவில்லை.

ஆசிரிய சமுதாயத்தில் மிகப் பெரும்பான்மையானதொகையாக உள்ளவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களே ஆனால் இவர்களுக்கே மிகக் குறைந்த சம்பள உயர்வு வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளமை மிகுந்த வேதனையையும், கவலையையும் அளிப்பதாக இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

### முன்னைய சம்பளத் திட்டம்

9420 - 1x180 - 9600 / 10140
16x180 - 13020

| முன்னைய சம்பளம் ரூபா | | புதிய சம்பளம் ரூபா |
|---|---|---|
| 785 | — | 975 |
| 800 | — | 990 |
| 845 | — | 1020 |
| 860 | — | 1035 |
| 875 | — | 1050 |
| 890 | — | 1065 |
| 905 | — | 1080 |
| 920 | — | 1095 |

### புதிய சம்பளத் திட்டம்

11700 – 1x180
11880 / 12240 – 12x180,
4x240 - 15360

| | | |
|---|---|---|
| 935 | — | 1110 |
| 950 | — | 1125 |
| 965 | — | 1140 |
| 980 | — | 1155 |
| 995 | — | 1170 |
| 1010 | — | 1185 |
| 1025 | — | 1200 |
| 1040 | — | 1220 |
| 1055 | — | 1240 |
| 1070 | — | 1260 |
| 1085 | — | 1280 |

### தமிழர் விடுதலை பாதுகாப்புப் பேரணி:

## மாணவர்கல்வி குழம்பினால் இனத்துக்கே பெரு நஷ்டம்

(யாழ்ப்பாணம்)

''எமது விடுதலைப் போராட்டத்திற்குப்பக்கபலமாக உருவாகும் சிந்தனையாளர்களையும், படித்த இளைஞர்களையும் இழக்க வேண்டிய ஒரு சூழ்நிலையை உண்டுபண்ணுடல் நாமனைவரும் ஒன்று சேர்ந்து மாணவர்களின கல்வி முன்னேற உதவியளிக்க வேண்டியது தலையாய கடமையாகும்'' என்று தமிழர் விடுதலைப் பாதுகாப்புப் பேரணி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

''தமிழ் மாணவரின் கல்வியில் குழப்பமும், விரக்தியும் ஏற்பட்டுவரும் இவ்வேளையில் ஒருசிலர் எமது மாணவர்களின் கல்வியில் குழப்பத்தை உண்டு பண்ணினால் எமது இனத்திற்குப் பாரிய நஷ்டமும் பாதிப்பும் ஏற்படுமே தவிர எவ்வித இலாபமும் உண்டாகப்போவதில்லை. பரீட்சையைக் குழப்புவதும், கல்வியைத் தடைசெய்வதும் விடுதலைப் போராட்டத்திற்குப் பயனளிக்காது. எமது விடுதலைப் பயணம் வருங்காலச் சிந்தனைச் சிற்பிகளான மாணவர் கரத்தில்தான் தங்கியுள்ளது'' என்று அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருக்கிறது.

### இன்று முதல் வங்கிச் சேவை

கடந்தசில நாட்களாக மூடப்பட்டிருந்த குருநகர் இலங்கை வங்கி அலுவலகம் மீண்டும் இன்று முதல் திறக்கப்பட்டு அதன் கொடுப்பனவு வேலைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது, நாளை தபால் கந்தோர்கள் மூலம் வழங்கப்படும் பென்ஷன்வேலைகள் நடைபெறும்

### யாழப்பாண ...

— 1-ம் பக்கத் தொடர்ச்சி

எடுத்துச் செல்ல நேற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தீவிரவாதிகள் சில நாட்களுக்கு முன் யாழ் புகையிரத நிலையத்தை சேதமாக்கியதால் நிறுத்திவைக்கப்பட்டதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது. இது பற்றி அமைச்சர் மொகமட் விடுத்த அறிக்கையில், வடபகுதி புகையிரத பாதைகளும் சீராக்கப்பட்டு விட்டன என்றும் மீண்டும் இப்பகுதிக்கான ரயில் சேவைகளை ஆரம்பிக்க பொது மக்களை ஒத்துழைக்கும்படியும் வேண்டியுள்ளார்.

### 172 நிலைய...

1–ஆம் பக்கத் தொடர்

அட்டை ஆகியவை ஏற்கனவே கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டு விட்டதாகவும். ஓரிரு தினங்களில் அவை இங்கு வந்து சேருமெனவும் தெரியவந்துள்ளது. இப்பரீட்சை யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் மட்டும் நடைபெறும்.

### இந்தியாவுடன்...

— 1-ம் பக்கத் தொடர்ச்சி

யில் சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்தால் இந்தியாவின் உதவியை நட்பின் மூலம் பெற்று இந்நாட்டின் அரசியல் பிரச்சினையையும் பயங்கரவாதப் பிரச்சினையையும் முடிவுக்குக் கொண்டு வரும் என்றும் தெரிவித்தார்.

சர்வதேச ரீதியில் இந்தியாவுக்கு எதிராக நடந்து கொண்டும், இந்தியாவை விரோதித்துக் கொண்டும்எமதுபிரச்சினைகளை ஒருபோதும்தீர்க்க முடியாது எனவும் அவர் வலியுறுத்திச் சொன்னார்

இந்திராகாந்தி பதவியிலிருந்த போது, அவருக்கு ஒரு கடிதம் எழுதியதன் மூலம் குட்டிமணியை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பச் செய்த தனது சாதுரியத்தையும் ஸ்ரீமாவோ இங்கு உதாரணமாக எடுத்துக் கூறினார்.

''இந்தியாவுடன் இனப் பிரச்சினை பற்றிப் பேசமாட்டோம் என்று பிரதமர் பிரேமதாசா அறைகூவினார், ஆனால் அவர் பாங்கொக் பயணமான அடுத்த நாளே அமைச்சர் அத்துலத் முதலியை அனுப்புவதாக ஜனாதிபதி அறிவித்தார்'' எனவும் அவர் தமது பேச்சில் சுட்டிக்காட்டினார்.

## நவாலி, கட்டுடை பகுதியில் கசிப்புக்குகைகள் முற்றுகை

(மானிப்பாய்)

நவாலி, கட்டுடை பொது மக்கள் ஒன்றிணைந்து நேற்று ''கசிப்பு ஒழிப்பு'' ஊர்வலமொன்றை நடாத்தினர்.

இவ் ஊர்வலத்தினர் கட்டுடை, நவாலி, மானிப்பாயூடாகச் சென்று சுமார் பதினைந்திற்கு மேற்பட்ட கசிப்புக் குகைகளை முற்றுகையிட்டு கசிப்பு காய்ச்சுவதையும், விற்பதையும் நிறுத்துமாறு கோரினர். அதற்கு கசிப்புக் கும்பல் ''எங்களுக்கு பிழைப்பதற்கு வழியொன்றைக் காட்டுங்கள் நாம் இத்தொழிலை விட்டு விடுகிறோம்'' எனக் கூறியதாம்

அதற்குச் செவி மடுத்த ஊர்வலத்தினர் கசிப்பை ஒழிக்க ஒரு வார கால அவகாசம் வழங்கியதாக தெரிய வந்துள்ளது. அதன்பின் கசிப்பு விற்பனை, தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எச்சரித்தனராம்.

### நாவற்குழி...

— 1-ம் பக்கத் தொடர்

டுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான குருநகர் மக்கள் நேற்று அரசாங்க செயலகத்துக்குச் சென்று அரசாங்க அதிபர் திரு எம் பஞ்சலிங்கத்தைச் சந்தித்து தங்கள் பிரச்சினைகளை எடுத்துக் கூறினர். யாழ் பிரஜைகள் குழு உறுப்பினர்களும் இவர்களின் உடனடிப் பிரச்சினையை அரச அதிபருக்கு விளக்கிக் கூறினர்.

இவ்வாறு வெளியேற்றப்படுபவர்கள் தமது வீட்டுப் பாவனைப் பொருட்களை வாகனங்களில் ஏற்றிச் செல்ல 150 ரூபாவும், புதிய வீட்டுக்கு மாத வாடகையாக 150 ரூபாவும் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக இவர்களிடம் தெரிவிக்கப்பட்டதாயினும் அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

வீடுகளை விட்டு எழும்ப அவகாசம் தரவேண்டுமென்றும், மாதவாடகைக்குப் பதிலாக வேறு வீடு வழங்க வேண்டுமென்று பிரஜைகள் குழுவினரும், குடியிருப்பாளர்களும் கேட்டனர் கட்டிமுடிக்கப்பட்டுள்ள நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் தமக்கு இடம் தருமாறு இவர்கள் வலியுறுத்தினர். அரசாங்கத்தின் கவனத்துக்கு இதனைக் கொண்டு வந்து ஆவன செய்வதாக அரசாங்க அதிபர் பதிலளித்தார்.

### படுகொலைகளை...

— 1-ம் பக்கத் தொடர்

வது நிறுத்தப்பட வேண்டுமானால், இலங்கையில் இடம் பெறும் இனக்கொலைகளை உடன் நிறுத்துவதே பாரதத்தின் முக்கிய பொறுப்பு எனவும் திரு. அமிர்தலிங்கம்தெரிவித்தார்.

இதற்கிடையே இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்றவர்களின் படகுகள் மீது இலங்கைக் கடற்படையினர் நேற்று துரத்திச்சென்று சுட்டதாக தனுஷ்கோடி போய்ச் சேர்ந்த தமிழ் அகதிகள் தெரிவித்தார்கள்.

### காரைநகரிலும்....

—1-ஆம் பக்கத் தொடர்

தரவிடப்பட்டுள்ளது.

இதனால் பாதிப்புறும் குடியிருப்பாளர்கள் ஊர் காவற்றுறை உதவி அரசாங்க அதிபருக்கு முறையிட்டபின்னர் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்துக்கு வந்து தமது கஷ்டத்தை எடுத்துக் கூறினர்.

முகாமுக்கு அண்மையில் உள்ள ஆறு வீடுகளில் குடியிருப்பவர்களை உடனடியாக அங்கிருந்து வெளியேற நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையே முகாமுக்கு அண்மையிலுள்ள வீடுகளைச் சேர்ந்த பலர் தமது இல்லங்களிலிருந்து அச்சத்தினால் வெளியேறி விட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

### தலைவர் ..

— 1-ம் பக்கத் தொடர்

யில் மற்றொரு கோஷ்டிவந்து அதனைக்கடத்திச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் வந்த இளைஞர் கோஷ்டியொன்று தலைவரின் மகனின் தனிப்பட்ட காரைக் கடத்திச் சென்றதாகவும் கூறப்படுகின்றது.

## மரண அறிவித்தல்

### சில்லாலை செல்லம்மா (மரியம்மா)

சில்லாலை செல்லம்மா என அழைக்கப்படும் மரியம்மா காலமானார். இவர்கரம்பொன்செல்லசப்பி என அழைக்கப்படும் மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலம் சென்ற சிசிலி அம்மா, பவுலினம்மா (செல்வம்) ஆகியவர்களின் அருமைத் தாயாரும் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை (காரம்பொன்) யின் அருமை மாமியும், மேரிசெசில் ரூபாகினியின் அருமைப் பேத்தியும் சுருவிலைச் சேர்ந்த திரேசம்மா தங்கராசம் விறிசிற் புஸ்பம் நாரந்தனையைச் சேர்ந்த யோசவ் மரியநாயகம் ஆகியோரின் சிறியதாயாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியை இன்று பி. பகல் 3 மணிக்கு சில்லாலையில் நடைபெறும்.

'ஈழமுரசு' - ... அட்வர்டைசிங் அசோசியேற்றட் ஸ்தாபனக்காரரால், 27, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 19-2-1985 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336